**குருநாகல் பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குருநாகல் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

#### 1.3.1 தேறிய சொத்துக்கள் குறைவடைதல்

--------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் நிலைமை ரூபா 109,481,721 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது தேறிய சொத்துக்கள் ரூபா 124,517,730 ஆக காணப்பட்டமையால் தேறிய சொத்துக்களில் ரூபா 15,036,009 இனால் வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 986,403 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1999 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதேச சபையால் கையேற்கப்பட்டிருந்த 41 காணிகளினதும் 05 கட்டிடங்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் அரசின் நன்கொடையாக சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த ஜே.சீ.பீ. இயந்திரம், 02 கெப் வண்டிகள் மற்றும் டிரக் வண்டியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 மார்ச் 09 ஆந் திகதி சபையால் ரூபா 87,500 பெறுமதியான கை உழவு இயந்திரமொன்று விற்பனை செய்யப்பட்டிருந்துடன் அந்த அகற்றலுக்காக ரூபா 77,962 தொகை மீளாய்வாண்டின் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களித்தல்

கணக்கு வரவு வைக்கப்பட்டு மோட்டார் வாகனகங்கள் மற்றும் வண்டில்கள் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில்கள் கணக்கின் பெறுமதி ரூபா 22,541,228 தொகையில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபையிடம் இல்லாத ரூபா 447,721 பெறுமதியான குப்பை வண்டிகள் இருப்புகளின் பெறுமதியும் நிலையான சொத்துக்களின் பெறுமதியும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இல்லாத ரூபா 3,218,395 ஆன 03 உழவு இயந்திரங்களின் பெறுமதியும் ரூபா 392,312 தொகையான 03 டிலேர்களின் பெறுமதியும் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 24,800 பெறுமதியான கழிவுப்பொருள் வண்டியின் பெறுமதி மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 திசெம்பர் மாதத்தின் பதவியணியினரின் சம்பளத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பல் ரூபா 3,598,848 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை சம்பள மீள்நிரப்பல் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியான ரூபா 10,681,959 தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை தொடர்பான கூற்றில் கிடைக்க வேண்டியதென காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்களின் அளவு ரூபா 7,083,111 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) வருட ஆரம்பத்தின் ஆரம்ப மீதி ரூபா 98,748,043 தொகையான நானாவித நிர்மாணக் கடன்பட்டோர் கணக்கின் மீதிகளில் ரூபா 44,621,579 ஆன மீதியொன்று மீளாய்வாண்டினுள் எவ்வித அங்கீகாரமொன்று இல்லாமல் 40 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திரட்டிய நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்

மீளாய்வண்டு தொடர்பாக இறுதி மீதியின் கீழ் 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேடுகளின் இடையே ரூபா 58,664,910 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 60,162,707 ஆகும். அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாத ரூபா 34,493,982 ஆன மீதியொன்று உள்ளக்கட்டிருந்ததுடன்அதில் நிதிக்கூற்றுக்கள் திகதி வரையில் ரூபா 3,866,350 ஆன மீதியொன்ற காணப்பட்டது.

(ii) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதியில் அண்மித்த வகையில் 67 சதவீதம் அதாவது ரூபா 40,460,547 தொகை நானாவித கடன்பட்டோர் ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 33,469,765 தொகை வருடக் கணக்காக இருந்து வரும் மீதியாக இருந்து வருவதுடன், அவை எத்தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டியதென இனங்காண முடியாதிருந்தது. மேலும் ரூபா 1,113,628 ஆன முற்பண மீதியில் ரூபா 854,036 தொகை வருடக் கணக்காக இருந்து வரும் சபையினால் தீர்வுசெய்யப்படாத மீதியொன்றாக காணப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 78,580,886 ஆக இருந்ததுடன், தகவல் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 30,849,517 ஆன மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாத ரூபா 10,189,479 ஆன மீதிகள் காணப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு திகதி வரையிலும் இந்த நிலுவை மீதியிலிருந்து ரூபா 9,586,671 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளில் ரூபா 26,317,503 தொகையான நிர்மாணக் கடன்கொடுத்தோராக இருந்ததுடன், இதில் ரூபா 10,160,976 தொகை வருடக் கணக்காக இருந்துவரும் மீதிகளாக இருந்ததுடன், கடன்கொடுத்தோர் தரப்பாக இனங்காண முடியாதிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 75,512,416 தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் உருவான மீதி காண்பிக்கப்பட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அக்கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 35,480 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 1882/22 ஆம் இலக்க வீடமைப்பு ஆதனங்கள் அபிவிருத்தி மற்றும் காணித் துண்டாக்கி விற்பனை செய்வதற்குரிய துணை உறுப்புரை | |
| (i) 2015 சனவரி 20 ஆந் திகதிய திருத்திய 03 2(அ) பிரிவு | 02 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தென்னங் காணியை பரிக்கும் போது அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், கொஸ்கஹமுளவத்த காணி, இடம்கஹபொலவில் அமைந்துள்ள லெட்சுமிவத்த காணி, ஆதாகல கந்த காணிகளின் பகுதி திட்டங்களுக்கு (A 9163 மற்றும் 9165) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமொன்று இல்லாமல் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 14(2) ஆம் பிரிவு | விற்பனையாளரிடமிருந்து காணி விற்பனை தொடர்பாக காலாண்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் பேரில் சபையினால் மதிப்பிடப்பட்ட விற்பனையில் 1 சதவீதம் வரி அறவிடப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,327,915 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,591,467 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 15,736,445 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 8,884,734 ஆன மூலதன பெறுவனவுகள் மற்றும் ரூபா 28,668,152 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 18,544,497 ஆன மிகையாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 21,090 | 23,715 | (2,625) | தனிப்பட்ட வேதனம் | 53,700 | 46,268 | 7,432 |
| (ii) | ஏனையவை | 121,350 | 102,254 | 19,096 | ஏனையவை | 50,412 | 57,110 | (6,698) |
| | உப மொத்தம் | 142,440 | 125,969 | 16,471 | உப மொத்தம் | 104,112 | 103,378 | 734 |
| (iii) | மூலதன வருமானம் | 8,885 | 63,762 | (54,877) | மூலதன செலவினம் | 28,668 | 89,518 | (60,850) |
| | மொத்தம் | 151,325 | 189,731 | (38,406) | மொத்தம் | 132,780 | 192,896 | 60,116 |
| | மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் | 38,328 | 22,591 | 15,737 | மிகை/ பற்றாக்குறை | 18,544 | (3,165) | 21,709 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 142,440,126 இல் 85 சதவீதம் அதாவது ரூபா 121,350,063 தொகை சபையின் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 8,884,734 ஆன முழு அளவும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக வழங்கியிருந்த பணத்தினை அடக்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 104,112,210 இல் 52 சதவீதம் அதாவது ரூபா 53,699,901 தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவினமாக இருந்ததுடன் அவற்றில் 75 சதவீதம் அதாவது ரூபா 40,218,192 ஆனன சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்ததுடன், அப்பெறுமதி வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 28,668,151 தொகையில் 19 சதவீதம் அதாவது ரூபா 5,563,563 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் எஞ்சிய 81 சதவீதம் அதாவது ரூபா 23,104,588 ஆகிய தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுடன் தொடர்புபட்டிருந்தது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையை ஸ்தாபிப்பதற்கு முன்னர் மல்லவபிட்டிய பிரதேசத்தில் சந்தையொன்று நிர்மாணிப்பதற்காக சபையால் குருணாகல் உப மாவட்ட செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 130,000 ஆன நிலையான வைப்புக்களின் கீழ் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட போதிலும் அம்மீதியின் உரித்து மற்றும் உள்ளமை தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று காணப்படவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் மேற்பார்வையாளரின் களத்துறை களஞ்சியாக ரூபா 28,645 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(இ) 1990 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி சேவை ஊழியர் பொதுச் சங்கத்திற்கு 2.5 சதவீத வட்டி அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 100,000 கடன் தொகை உரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஓராண்டின் பின்னர் தீர்ப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த உடன்படிக்கை காலம் முடிவடைந்த 15 ஆண்டுகள் அண்மித்ததாக காணப்பட்டதுடன், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவா றான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 10,990 | 10,668 | 11,012 | 9,336 | 7,481 | 10,004 |
| (ii) குத்தகை வாடகை | 4,952 | 1,437 | 221 | 4,285 | 2,060 | 193 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,989 | 513 | - | 1,725 | 2,247 | 49 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iv) ஏனைய வருமானம் | 127,894 | 129,822 | (559) | 99,811 | 118,801 | - |
| | ----------- | ----------- | --------- | ------------ | ------------ | ---------- |
| மொத்தம் | 146,825 | 142,440 | 10,674 | 115,157 | 130,589 | 10,246 |
| | ======= | ===== | ===== | ======= | ======= | ====== |

**2.4.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு | | | நிலுவை மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 10,004 | 10,666 | 20,670 | 2,324 | 7,334 | 9,658 | 7,680 | 3,332 | 11,012 |
| வாடகை | 193 | 1,459 | 1,652 | 193 | 1,238 | 1,431 | - | 221 | 221 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 49 | 510 | 559 | 49 | 510 | 559 | - | - | - |
| *ஏனைய வருமானம் | - | 127,894 | 127,894 | - | 128,453 | 128,453 | - | (559) | (559) |
| மொத்தம் | 10,246 | 140,529 | 150,775 | 2,566 | 137,535 | 140,101 | 7,680 | 2,994 | 10,674 |
| | ===== | ====== | ====== | ===== | ====== | ===== | ===== | ===== | ===== |

**2.4.3 வீதவரியும் வரியும்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது வீதவரி மற்றும் குத்தகை நிலுவை ரூபா 10,003,807 ஆக இருந்ததுடன், அந்நிலுவை பெறுமதியில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,323,757 அதாவது 23 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம விதிகள்) 32-42 வரையான விதிகளின் பிரகாரம் காலாண்டை அடிப்படையாகக் கொண்டு நிலுவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு குறித்த அறிவித்தல் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வீதவரி அறவிடும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 குத்தகை வாடகை**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 9 ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் குத்தகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன், இந்த இடங்களிலிருந்து பெற்றுக்கொண்ட தேங்காய் விளைச்சல்களிலிருந்தான வருமானம் எதுவும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான போயகன 06 கடைகளுக்காக 05 மேற்பட்ட காலமாக குத்தகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன், அந்த கடைகள் பயன்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பான தகவல்கள் கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.4.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்காக தலைமை அலுவலகத்திற்கு விளம்பர பதாகை கட்டணங்களாக ரூபா 40,600 ஆன தொகை இரண்டு தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட வருமான உத்தியோகத்தரால் 06 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இதுவரை எவ்வித வருமானமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.6 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 32,774,152 ஆக இருந் போதிலும், முத்திரைக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 34,356,915 ஆன முத்திரைக் கட்டணங்கள் நிலுவையாக காணப்பட்டன.

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் பதிவேட்டில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், கட்டணங்கள் அளவு இனங்காணப்பட்ட அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் மார்ச் முதல் திசெம்பர் வரையான 07 மாதங்களுக்குரிய கிடைக்க வேண்டிய தண்டபணம் தொடர்பான தகவல்கள் சபையினால் தண்டப் பண பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பொருட் பதிவேடுகளில் ஆண்டின் சேர்த்தல்கள் மற்றும் கழித்தல்கள் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 38,975 தொகையான 04 மதிப்பிழந்த காசோலைகள் இனங்காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 9,155 பெறுமதியான 04 வழியில் அனுப்புகை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் வங்கிக் கணக்கில் காணப்படுகின்ற காசேட்டின் வங்கி மீதி மற்றும் வங்கி மீதி சமப்படாமைக்கு காரணமாக ரூபா 7,125 தகவல் தேடுவது சிக்கலாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடக் கணக்காக இருந்து வரும் 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 82,625 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 மார்ச் 27 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 8 ஏக்கர் 39.5 பேர்ச் அளவிலான இடம்கஹபொலவில் அமைந்துள்ள லெட்சுமி தோட்டக் காணி ஏலவிற்பனை செய்யும் பிரிக்கப்பட்ட காணிக்காக 2016 யூன் யூன் வரையிலும் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கப்படாதிருந்ததுடன் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 39 ஆம் இலக்க காணியில் 20 அடி நீளம் 15 அடி அகலமான அளவில் செவ்வக குழியொன்று தோண்டி குறுக்கு வீதியொன்றை அபிவிருத்தி செய்வதற்காக மண் எடுக்கப்பட்டிருந்தது.

(எ) கெட்டுவான கிராமத்தில் அமைந்துள்ள ஆதாகல கந்தையில் 07 ஏக்கர் அதாவது 2.8328 ஹெக்டேயரான இரண்டாம் பகுதிக்காக 2015 மே 12 ஆந் திகதி அதாவது சபை கலைப்பதற்கு அண்மித்த தினமொன்றில் துணை விதிக்கு முரணாக எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளாதிருக்கும் போது 50 காணித்துண்டுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட இணை பகிர் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 3.2 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு

மீளாய்வாண்டிற்காக சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 116 ஆக இருந்ததுடன், நிரந்தர பதவியணியினர் எண்ணிக்கை 124 ஆகவும் 23 வெற்றிடங்களும் மிகை ஊழியர்கள் 20 ஆக இருந்தது. அம் மிகை ஊழியர்கள் முழு எண்ணிக்கையும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருந்ததுடன், 04 நூலகர் பதவிகளில் 03 வெற்றிடங்களாக காணப்பட்டன.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

சபையின் உருவாக்கப்பட்ட வருமானத்தின் கீழ் 04 வரவு விடயங்களின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 31,724,146 ஆக இருந்ததுடன் அறவிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 18,470,818 ஆக இருந்தது.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு